உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்: அமிர்தென, எழுநா எச்சில்
மெச்சிநா ணாளும் விண்ணோர் மிசைகுவர்: வேத போதன்
'நச்சினார்க் கினியன்' எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்"

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"—தமிழ் மறை

தொகுதி 2. } அக்ஷய-௵ மார்கழி-௴ 1926-௵ டிசம்பர்-௴ { பகுதி 12.

பாரத கீதம்.

எண்ணிய பல்வளம் யாவும் நிரம்பிய எங்கள் பிறப்பிடமே!
புண்ணிய வான்மிகர் வ்யாஸர் சுகமுனி போற்றிய பூமகளே!
கண்ணிய மிக்கநல் வாழ்வை இழந்திழி காலம் அடைந்தனையே!
திண்ணிய மெய்ம்மை யறச்சமர் செய்துயர் செல்வம் இழந்தனையே! 6

கால்வயி றாகிய கஞ்சியை யுண்டு கலங்குவரோர் சிலரே.
பால்வகை யாகிய கலாநலம் உய்த்துணர் பண்பறி யார்பலரே,
மேல்வழி யெவ்வண மெய்துவம் யாமென விம்முவர் பற்பலர்நின்
கால்வழி வந்தவர் முப்பது கோடியர் கதியிது பாரதமே! 7

பஞ்சினை நூற்று மகிழ்ந்த பழந்தொழில் பற்றற விட்டதனால்
நஞ்சினை யொத்த மிடிப்பிணி பற்றி நலிப்பது கண்டனம்யாம்.
எஞ்சின கொஞ்சம் இயற்கை வளத்தினை எங்ஙன் வளர்ப்பதென
விஞ்சின வூக்கம் முயற்சி புரிந்திட மேவுக பாரதமே! 8

கைத்தொழி லென்ற பெயர்ப்பட முன்பு கணித்தனர் பற்பலரே.
மெய்த்தொழி லாகிய மற்றவை எங்கு விளிந்தன போயினவே.
பொய்த்தொழில் செய்த பொறித்தொகை வந்து புகுந்தன வெண்ணறவே
இத்தொழில் மாறுதல்என்றென வெண்ணுவம் எம்மனை பாரதமே! 9

எண்டிசை போற்றிய சீர்பெரு வாழ்வின் இருந்தனை பண்டொருநாள்
தண்டமிழ் ஆரியம் ஆந்திரம் ஆதியதாங்கிய தண்ணளியாய்
மண்டி யடைந்தவர் வாழ்வுற வாழ்வு வழங்கிய தாயகமே!
மண்டல மெங்கணும் வாழ்பவர் வாழ்வுற வாழியர் வாழியரோ. 10

—குஞ்சிதபாதம்.

மருவி வழங்கும் சில சொற்கள்.

(317-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

'அண்ணாக்கவுறு' என்று கூறும் சிலரைப் பரிகசித்து வேறு சிலர் 'அரணாக்கயர்'என்று அத்தொடரைத் திருத்துவர். முந்தியவர் கூறியது எவ்வளவு தவறானதோ, அவ்வளவு தவறானதே பிந்தியவர் திருத்தமும். இருவரும் கருதிக் கூறிய தொடர்மொழி அரைஞாண் (கயிறு)" என்பதே. இதற்கு 'இடுப்பிற்கட்டும் கயிறு' என்பது பொருள். (அரை-இடுப்பு; ஞாண்-நாண்: கயிறு). 'கயிறு' என்றசொல் அநாவசியமும் மிகையும் ஆம் என்பதையும் கவனிக்க.

"கருகப்பிலே" என்பதைக் "கருவேப்பிலே" என்பதன் மரூஉ எனக் கொள்வர் சிலர். 'கருவேப்பிலே' என்பதற்குக் 'கருவேம்பின் இலே' என்பது பொருள். 'கருவேம்பு' என்ற ஒருவகை வேம்புண்டு. அதற்கும் 'கருகப்பிலே' என்பதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஆதலின், "உண்ணற்கான கறிக்கு இடும் காரணத்தால் அது 'கறிவேப்பிலே' "என்றிருத்தலே நேர்" என எண்ணுகிறோம்.

ஒரு பாவமும் அறியாதானை 'அப்பாவி' என்றும், தீங்கு செய்ய வல்லமையில்லாதானை 'அப்பிராணி' என்றும்; நாம் பரிந்து கூறுகிறோம். இச்சொற்கள் அவ்விருவர்க்கும் முறையே பொருந்துமாறெங்ஙனம்?: 'அப்பாவி' என்பதற்கு 'அந்தப்பாவி' என்றும்; 'அப்பிராணி' என்பதற்கு 'அந்த மிருகம்' என்றுமே பொருள் உண்டு. ஒரு பாவமும் அறியாதானை 'அந்தப்பாவி' என்னலும், தீங்குசெய்யச் சக்தியில்லாதானை 'அந்த மிருகம்' என்னலும் சரியா? அவை இரண்டும் வசை மொழிகளன்றோ? ஆகலின், அவை முறையே 'அபாவி' அபிராணி' என்பவற்றின் திரிபுகளே ஆதல்வேண்டும். அவை இரண்டும் வடமொழிச்சொற்கள். அ-பாவி (ந+பாவி): பாவமில்லாதவன், அதாவது நிர்த்தோஷி என்றும்; அ-பிராணி=(ந+பிராணி) பிராணனற்றவன் அதாவது செத்தவன் போன்றவன். ஆதலின் தீங்கு செய்யத் திறமையற்றவன் என்றும் பொருள்படும் என்று எமக்குத் தோன்றுகிறது. நிற்க.

மடாதிபதிகள், சாமியார்கள் முதலியவர்களை "ஸ்ரீலஸ்ரீ இன்னார்" என்று மரியாதைப்படுத்திப் பேசவும் எழுதவும் செய்கின்றார்கள். 'ஸ்ரீ' என்பதன் பொருள், 'திரு' என்பதை யாவரும் அறிவர். 'ல' என்பது எதைக் குறிக்கிறது? மேலும் இரண்டு ஸ்ரீகள்

இருத்தற்குக் காரணமும், அவற்றின் பொருளும் என்ன? இதனைப் பற்றி ஆராய்ந்தவர் இரண்டொருவர்கூட இரார்என எண்ணுகிறோம். தமிழிலும் இங்கிலீஷிலும் சரித்திர நூல்களும் பிறவும் எழுதிவரும் ஒரு போதகாசிரியக் கிழவனரிடம் நாம் இதன் உண்மையைப்பற்றி விசாரித்தபோது, அவர் "'ல' என்பது 'லக்ஷம்' என்பதைக் குறிக்கும் எழுத்து. ஆதலின், 'ஸ்ரீலஸ்ரீ' என்பது 'ஸ்ரீ லக்ஷம் ஸ்ரீ' என்று பொருள்படும். லக்ஷம் தடவை "ஸ்ரீ" என்று போட்டு எழுதுவது மிக்க மரியாதைக்குறி. ஆயினும் அங்ஙனம் செய்யின் காலதாமதமும் சிரமும் பொருட்செலவும் ஏற்படுமாதலின், சுருக்கமாக, "ஸ்ரீலஸ்ரீ" என்று எழுதப்படுவதை எழுதுவோர் எழுதப்படுவோர் ஆகிய இருதிறத்தாரும் அங்கீகரித்து மகிழ்கின்றனர்" என்றார். இவ்விஷயம் 'சகஸ்ரகூகூ என்று ஒருமுறை கூறித் திருப்தியுற்ற ஒரு சாமார்த்தியசாலியின் அதிசாதுரியத்தையே எமக்கு நினைப்பூட்டுகிறது. என்னை?

"வடமொழி வாணன் ஒருவன் இருந்தான். அவன் தன் வீட்டறையில் கள்வனொருவன்புகுந்து தன்கருமத்திற் கண்ணாயிருந்ததைத் திடீரென கண்டு பதறினன். திகைப்பும் அச்சமும் மேலிட்ட அவன், "கூ! கூ!! கள்ளன்! கள்ளன்!!" என்று பன்முறை கூச்சலிடாது, அக்கம்பக்கத்தாரைக் கூட்ட ஒரு யுக்தி செய்தான். "ஏன் நாம் பல வார்த்தைகள்கூறிப் பன்முறை வாய்நோவவும் குடல் பதறவும் கதறவேண்டும். இங்ஙனம் சிரமப்பட்டு கதறுவதுடன், காலதாமதமும் செய்துகொண்டிருக்கவேண்டும்?" என்று 'சகஸ்ர கூகூ' என்று ஒருமுறை கூவிக் 'கூகூ!கூகூ!! என்று ஆயிரமுறை கூச்சலிட்டதற்குச் இது சமானம்' என்று எண்ணித் திருப்தியும் மகிழ்வும் அடைந்தானும். இவனுடைய அபூர்வ சாதுரிய சாமர்த்தியங்கள் எவ்வளவுவியக்கத்தக்கனவோ அவ்வளவினும் அதிகமாக வியக்கத்தக்கது "'ல' என்பது 'லக்ஷம் என்பதைக் குறிப்பது" என்றெண்ணுவோருடைய சாமர்த்தியம். 'ஸ்ரீலஸ்ரீ'யைப்பற்றி எம்முடைய அபிப்பிராயம் யாதெனின், 'சீலஸ்ரீ' என்பதற்குப் பதிலாக வடமொழிப் பயிற்சி இல்லாத ஒருவரால் அது ஆதியில் 'ஸ்ரீலஸ்ரீ' என்று தவறாக எழுதப்பட, அதன் பொருளைச்சிந்தியாது, பலரும் அவ்வாறே எழுதி வரலாயினரென்பதே. சீலஸ்ரீ என்பதற்கு "சீலம் வாய்ந்த சிறப்புப் பொருந்திய" என்பது பொருள். [சீலம்—நல்லொழுக்கம்]

—பத்திராதிபா.

பண்டைத் தமிழரசர் ஆட்சிமுறை.

(322-ம் பக்கத்தொடர்ச்சி)

இவ்வாறு சேனைப்படையே யன்றிக் குடிமக்கட்குக் காவலாகச் சாதாரண ஊர்க்காவலாளரும் அமர்ந்திருந்தனர். இவர் இராக் காலத்தே துயில்கொள்ளாது, பெருந்தைரியத்துடனே காவற்றொழிற்குரிய வித்தையாவும் பயின்று, கள்வர் பழக்க ஒழுக்கம் யாவுந் தெரிந்து, இரவிலே கையிற் பந்தம் தாங்கியோ, அல்லது திருடரைப்பிடித்தல் மேற்கொண்டிடின் இருட்டிலேயோ திரிவர். இவர் செயலை நன்கு விளங்குகிறது மதுரைக் காஞ்சிப் பாட்டு:—

"இரும்பிடி மேஎந்தோ லன்ன விருள்சேர்பு
கல்லு மானுந் துணிக்குங் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கறல்
நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலன் அகழ் உளியர் கலன் நசைஇ கொட்குக்
கண்மா றுடவர் ஒடுக்கம் ஒற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ணர் அஞ்சாக் கொள்கையர்
அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர், செறிந்த
நூல்வழிப் பிழைமா நுணங்குநுண் தேர்ச்சி
ஊர்காப் பாளர் ஊக்கருங் கணையினர்"

—[மதுரை **634-647**

புறநானூற்று 37-ஆம் செய்யுளில் உள்ள "யாமங் கொள்பவர் சுடர் நிழல்" என்ற அடியும் இவர் பெற்றியைப் புலப்படுத்தும்.

ஊரின் மதிற்புறத்திலே காவலாளர் நின்று மணிதோறும் மணியடித்தும் நாழிகை தெரிவித்தும், உள்ளோரைக் கடையடை நேரத்தே யகவி யுட்புகும்படி வேண்டியும் கருமம் நடத்துவர் இதற்கு இலக்கியம்,

"பலர்புகு வாயி லடையக் கடவுநர்
வருவீர் உளீரோ வெனவும்——" [குறுந் *118*.]

"காப்புடை வாயில் போற்ரூே வென்னும்
யாமங் கொள்பவர் நெடுநா வொண்மணி
பொன்றெறி பாணியி னிரட்டும்"—[நற் 132]

என்பன போன்றவைகளே.

இவரைத் தவிர்த்து ஜனங்களுக்கு நீர்நிலைப் பெருக்குவதற்கும் கோயில் முதலிய தருமத் தாபனங்களைக் கண்காணிக்கவும் உத்தியாகத்தினர் இருந்தனர் எனவும் ஊகிக்க இடம் இருக்கிறது. பாண்டியன் நெடுஞ்செழியனைப் பலகூறிக் குடபுலவியனர் எனும் புலவர் நீர்நிலைகளைக்கண்காணித்து வரும்படி உபதேசஞ் செய்கிறார் புறநானூற்றில், 18-வது பாட்டில் அவர் கூறிச் செல்வது மிகவும் அழகான நடையிலமைந்திருத்தலின், மேற்கோளே முற்றும் நிரம்பியிருக்கும் இவ்வியாசத்திலே அதனையும் பெய்தெழுதுகின்றேன்.

"தகுதி கேள்இனி மிகுதி யாள!
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்.
'உணவு' எனப்படுவது நிலத்தொடு நீரே!
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்தி சினோரே!
வித்தி, வான் நோக்கும் புன்புலம் கண் அகன்
வைப்பிற் ருயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு (உ)தவாதே! அதனல்
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம! இவண் தட்டோரே!
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே!

இதுமட்டுமோ? "வென்வேற், கொற்றச் சோழர் குடந்தை வைத்த, நாடுதரு நிதி" (அகம் 60) ஆலயங்கட்கு மானியம் விடுதற்கும், தேவருக்குத் திருவாபரணஞ் சமைத்தற்கும் உதவிற்று. பதிற்றுப்பத்து 15-வது பாடலில் வரும் "புரைவயிற் 'புரைவயிற் பெரிய நல்கி" என்ற அடியை விளக்க வந்த பழைய உரையாசிரியர், "'புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி' யென்றது உயர்ந்த தேவாலயமுள்ளவிடங்களிலே உயர்ந்த ஆபரணமுள்ளிட்டவற்றைக் கொடுத்தென்றவாறு" எனக்கூறிச் செல்கின்றனர்.

இம்மன்னர் தெய்வ விசுவாசம் "காடே கடவுள் மேன"(பதிற்13) என்ற மற்றோரடியினாலும் காணக் கிடக்கிறது.

இவர் பெருநிதியம், போரிலே மடிந்து மிடியுற்ற பகைக் குடியை மீட்டும் நன்னிலைக்குக் கொண்டுவருவதற்கும் உபயோகப் பட்டது. "பகைவர், கெடுகுடிப் பயிற்றிய கொற்ற வேந்தே!" என வாய்மொழிக் 'கபிலர்' செல்வக் கடுங்கோவாழியாதனைப் பாடுவதி னின்றும் இது துணிதலாம்.

சிலவரசர்க்கு இப்பொருள் தம் பிரஜைகளுக்குப் புதிய பயிர் வகைகளைக் கொணர்ந்து ஊதியம் பெறக் கொடுக்கவும், சாத்திரிக யந்திரமுறைகளைக் கையாளும்படி உதவவும், சிறந்த வீரர்க்குப் படைப் பரிசளிக்கவும் உதவிற்று. அதிகமானின் முன்னோருள் ஒருவனே, கரும்புப் பயிரை இந்நாட்டிற்கு வரைவழைத்ததாக (புறம் 99, 392) நாமறிகிறோம். இதுபோலவே, சோழமன்னருள் ஒருவரே, பாய்மரக்கப்பல் கொண்டு வங்கஞ் செல்லும் பழக்கத்தை விருத்தி செய்ததாக யூகித்தற்கு இடம் இருக்கிறது. (புறம் 66)

இவர் செல்வம், புலவர் சங்கத்தைக் குழுமி, தமிழ் வளர்த்தற்கும் உபயோகப்பட்டது. பாணருக்குப் பொற்றாமரையும், நறுநுதல் விறலியற்குப் பொன்னாரமும், வெள்ளி நாராலாகிய பூவும், கோடிக் கணக்காகப் பொன்னும், பிடியும், களிறும் மாவும் புலவர்க்கு வழங்கியதும் இப்பொருள் கொண்டேயன்றோ? திருமுடிக்காரியைநோக்கி

"கடல்கொளப் படாஅது உடலுநர் ஊக்கார்
கழல்புனை திருந்தடிக் காரி! நின் னாடே
அழல் புறந் தரூஉம் அந்தண ரதுவே!
வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவருள் ஒருவன் துப்பாகியர் என
ஏத்தினர் தரூஉம் கூழே, நும்குடி
வாழ்த்தினர் வரூஉம் இரவல ரதுவே!
வடமீன் புரையும் கற்பின் மடமொழி
அரிவை தோள்அள வல்லதை
நினதென இலை நீ பெருமிதத் தையே!

என்று 'பொய்யா நாவிற் கபிலர்' பாடியதும், 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' என்னும் இலக்கணத்திற் கொப்ப ஒழுகி நின்ற நம் பண்டைத்தமிழரசர் யாவருக்குமே உண்மையில் பொருந்துவதாகும்.

ரா. வாசுதேவ சர்மா M. A., B. L.,
Lecturer in Sanskrit; National College, Trichinopoly.

ஐயவினவிற்கு விடை.

தசரதருக்கு உத்திரகிரியை செய்தது பரதனே, சத்துருக்கனல்லன்.

'உச்சிமேற் புலவர்கோள் நச்சினார்க்கினியன்' 2-வது தொகுதி 10-வது பகுதி 316வது இதழில் வெளியிட்டுள்ள "ஓர் ஐயவினா"விற்கு எனக்குத் தோன்றிய விடையை வெளியிடுகிறேன்.

கம்பராமாயணம், வழிநூலும்; அதற்கு வடமொழி வால்மீக இராமயணமே பெரும்பாலும் முதனூலும் ஆனதுபற்றி, முதனூலி லுள்ள விஷயங்களையே மூலமாகக்கொண்டு வழிநூலின் பொருள் தேர்தல் நன்று, நியாயம், தெளிவு. ஆகையால் முதனூலில் விளக்கமாகவும், சந்தேகத்திற்கிடமில்லாமலும், தசரதருடைய உத்திரகிரியைக் கடன்களை பரதனே செய்தானென்றும், சத்துருக் கனன் வேதவிதிப்படி பரதன் சமீபத்திலிருந்து உதவி புரிந்தா னென்றும், வசிட்டர் முதலிய புரோகிதர்களும், மந்திரிகளும் சூழ்ந்து சென்றனரென்றும் கூறப்பட்டுள்ளதையே ஆதாரமாகக் கொண்டு பின்வரும் பாட்டிற்குப் பொருள்கூற முயல்கின்றேன். இதிற் குணங்காணிற் கொள்ளவும், குற்றங்காணிற் றள்ளவும் வேண்டுகின்றேன்.

முதலாவது, "என்று கூறி" என்று தொடங்குஞ் செய்யுளில்' "இடரின் முழ்கும்" என்பதிலுள்ள "முழ்கும்" என்பதைச் 'செய் யும் என் வினைமுற்று' ஆக்கி முழ்குபவனுமினான்" என்று பொருள் கூறி முடிக்க. "அத் துன்றுதாரவற்கிளையன்" என்பதிலுள்ள "அ" என்பதைப் பண்டறிசுட்டாகக்கொண்டு, 'பிரசித்தி வாய்ந்த தசர தன் மகனாகிய இராமனுக்கு இளைய பரதனால்' என்றுவது, "புகழ் மிக்க ஸ்ரீ இராமனுக்கு நேர் இளைய தம்பியாகிய பரதனால்" என்று வது பொருள் கூறல் தவறாகாது.

நகர்நீங்கு படலத்தில் கூறியுள்ளபடி கைகேயியையும் பரதனை யும் தசரதர் தள்ளிவிட்டார் என்பதையே பிரதான ஆதாரமாகக் கொள்ளல் கூடாது. ஏனென்றால் தசரதர் புத்திரசோகத்தால்

அறிவழிந்துள்ள நிலையில் அப்படிக்கூறியது; அவர் சுயபுத்தியுடனும் மனப்பூர்வமாகவும், கூறியதன்று. அவர் கூறியது அவரது வருத்தமிகுதியையும், இராமனிடத்திலுள்ள பற்றையும் பிரிவாற்றாமையையும், புத்திரசோகத்தையுமே வெளிப்படுத்துவதாம். சத்தியத்தையே பரிபாலிக்கின்ற தசரதர் அக்கினிசாக்ஷியாக விவாகம் செய்துகொண்ட கைகேயியைத் தன் மனைவியல்லள் என்றும் அவளிடம் தோன்றிய பரதனைத் தன் புத்திரனல்லன் என்றும் மனமொப்பிக் கூறியிருப்பாரா? மாட்டார்.

தசரதர் விசன மேலீட்டாலேயே விளம்பியதை வஸிஷ்டர் ஒப்பாதும், தாம் "நான்மறை நெறி செய் நீர்மையர்" ஆயினமைபானும், அந் நெறிமுறை பிறழாது, ஸ்ரீ இராமன் இல்லாமையால் அவனுக்கு அடுத்தவனைக்கொண்டே உத்தரகிரியை செய்வித்தார் என்க. இதற்கு ஆதாரம்:

"அனைய செய்கையால் அரசர் கோமகற்
கிளைய தன்மையா லிவைவ செய்துபின்
மனையி னெய்தினன் மாபின் வாழ்வினை
வினையி னெய்துமோர் பிணியின் வேலையான்"

—பள்ளிபடைப் படலம்—149.

இதில் "அரசர் கோமகற்கு இளைய தன்மையால்" என்றபடி, 'தசரதபுத்திரனாகிய இளவரசனாகிய இராமனுக்கு நேர் இளைய தம்பி என்கின்ற முறையில் செய்ய வேண்டிய கடன்களைச் செய்து மனையினெய்தினன்' என்று கூறப்பட்டுளது. அது சத்துருக்கனனைக் குறித்திருக்கும் பட்சத்தில், "இளைய தம்பியால்" என்று கூறியிருக்கலாம். மூத்தோன் இல்லாமையால், 'அடுத்த தம்பியால்' என்பதையும், 'மூத்தோனுக்குப் பதிலாக நேர் இளையோன் முறைப்படி செய்யவேண்டியவைகளை' என்பதையும் விளக்குதற் பொருட்டே "இளைய தன்மையால்" என்று கம்பர் கூறியிருத்தல் வேண்டும். ஆகையால் "பரதனே தசரதருக்கு உத்தரக்கிரியை செய்தான்; சத்துருக்கனன் அல்லன்" என்று என் சிற்றறிவிற்குத் தோன்றுகிறது.

R. S. V. R. சர்மன்,
தேசியக் கல்லூரி, திருச்சி,

மாண்டவன் மீண்ட மாயம்.

பதினேழாவது அத்தியாயம்.

கைலாஸத்தின் ஆலோசனை.

Kailasam's Soliloquy.

கைலாசத்திற்குத் தூக்கம் வரவில்லை. இருபது வருஷத்திற்கு முன் நடந்த "மங்களபுரம் கொலைக்'கேஸ்'" அன்று இரவு கைலாஸம் மூளையில் வேலைசெய்யத் தொடங்கிற்று. அவ் அறைக்குப் பக்கத்திலிடப்பட்டிருந்த ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு,

"என்ன! இதுபோன்ற அதிசயமான கேஸ் ஒன்று உண்டு என்று நான் கனவிலும் நினைத்ததே இல்லையே! எவ்வளவோ நானும் என் புத்தியைச் செலுத்திச் செலுத்திப் பார்க்கிறேன். ஒன்றுமே விளங்கவில்லை. 'மனிதவேட்டை நாம் ஆடவேண்டாம்' என்று யோசித்தால், ராமஸ்வாமி மேலுள்ள சிநேகம், இதை எப்படியாவது கண்டுபிடிக்கவேண்டுமென்று தூண்டுகிறது. அன்றியும் 'கண்டுபிடித்தோம்' என்ற பெருமையும் நமக்குண்டு.

"இதுவரை எல்லாம் சரியாகத்தான் வந்திருக்கிறது. ஸபாபதி, பாலாம்பாள், சிதம்பரம், இவர்களிடமிருந்து எவ்வளவோ அறிந்து கொண்டோம். சங்கரி ஒருத்தி பாக்கி இருக்கிருள். நாளை அவளையும் மங்களபுரத்தில் விசாரித்துவிடுவோமானல், அநேகமாய் இந்தக் கொலைக் கேஸ் தெளிவாய் விடும்.

"எனக்கு ஒருவித ஸந்தேகம். ராமஸ்வாமிக்கு ஒருவித ஸந்தேகம். 'தர்மராஜுதான் கொலை செய்தவன்' என்று அவன் நினைக்கிருன். 'சிதம்பரம்தான்' என்று நான் நினைக்கிறேன். ஒருவேளை இருவர் அபிப்பிராயமும் தப்பிதமாய் ஏற்படினும் ஏற்படலாம்.

"முதலாவது—சிதம்பரத்தைப்பற்றி யோசிப்போம். இந்த விஷயத்தில் சிதம்பரம் பூராப் பிரதிகூலமாகவே இருக்கிருர். ஏன் அவர் அப்படி இருக்கவேண்டும்? அவர் சொல்லுகிறபடி சோமு அவர் நண்பனுனல், நம்மோடு சேர்ந்து உத்ஸாகமாய் அவர் உதவி அல்லவோ செய்யவேண்டும்!"

"என்ன செய்கிறது? பாலாம்பாள் ராமஸ்வாமியின் தாயாராய் ஏற்பட்டுவிட்டதனால்தான், இனி, ஏதாவது செய்யக்கூசுகிறது. பத்திரிகைகள் மூலமாய், அவள் அதிகத் 'தமாஷ்' பேர்வழி என்றும், விஷயசுகத்தில் அதிகச் சபலமுள்ளவள் என்றும், சோரநாயகன் உள்ளவள் என்றும் வெளியாகிறது. அப்படி இருந்தால், தர்மராஜு சோரநாயக னல்லன். இப்பொழுது இருக்கும் நிலைமைகளை யோசித்தால், சிதம்பரம்தான் அவள் சோரநாயகனாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. மேலும் அவள் பேசிக்கொண்டு இருக்கும்பொழுது அவளுடைய முகவிகாரங்களை எல்லாம் நன்றாய்க் கவனித்தோம். சிதம்பரத்தின் பெயரையும், அவர் சம்சாரத்தின் பெயரையும் கேட்டால் அவளுக்கு அடிவயிற்றிலிருந்து எரிச்சல் உண்டாகின்றது. இதுவும் தவிர, இந்த ஐந்தாறு வருஷகாலமாய்ச் சிதம்பரம் தன்னைக் கவனிக்கிறதில்லை என்றாள். அதாவது வியாதி வந்தது முதல்—அதாவது சிதம்பரம் விவாகம்செய்து கொண்டது முதல்.

"பாலாம்பாள், தன் வாழ்வையும் உயிரையும் வெறுத்தவளாய் இருக்கிறாள். சிதம்பரத்தின்மேல் அவளுக்கு அதிக விரோதம் ஏற்பட்டுவிட்டது. அதனால்தான் என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிந்திருக்கிறாள். அதனால்தான் சிதம்பரம் கட்டைக் காண்பித்தது. ஆனால், அவளும் பூரா ஸமாசாரமும் என்னிடம் சொல்லவில்லை. பேசும்பொழுது தியங்கித் தியங்கிப் பேசுகிறாள். அதன் ரகஸ்யம் தெரிந்துவிட்டால் சிதம்பரம்மேலுள்ள சந்தேகம் உறுதியாய்விடும்.

"ஆனால் ஒரு விஷயம்: எவ்வளவு கெட்டவளானாலும் தன் புருஷனைக் கொன்றவனோடு கூடி வாழ ஒரு பெண்பிள்ளை துணிவாளா? ஆனால், ஒருவேளை, சிதம்பரம்தான் கொலை செய்தவரென்று அவள் அறிந்திருக்கமாட்டாள்.

"இன்னொரு விஷயம்: 'டப்பி சமாசாரமே கிடையாது' என்கிறார் சிதம்பரம். பாலாம்பாளோ, 'உண்டு; நான் கண்ணாலே பார்த்தேன்' என்றாள். சிதம்பரம் ஏன் பொய் சொல்லவேண்டும்? ஒருவேளை, டப்பி சிதம்பரத்தினுடையதாய் இருக்கலாம். கொலை நடந்த இரவில் அந்தத் தோட்டத்தில் தவறி விழுந்திருக்கலாம்.

"ஆனால், சிதம்பரம் அன்றிரவு இரண்டு மணிக்கு மதுரையில் நாடகக் கொட்டகையில் இருந்ததாகச் சொல்லுகிறார்.

"இன்னொரு ஸந்தேகம். ஒருவேளை, பாலாம்பாளே, தன் புருஷனைக் கொன்று இருப்பாளோ? அப்படியிருந்தால், அவள். தானாகவே இவ்வளவு ஸமாசாரத்தையும் வெளியிடத் துணியமாட்டாளே!

"ஆனால்—தர்மராஜு அன்றிரவே ஓடிப்போய்விட்டான். எதற்காக ஓடவேண்டும்? சிதம்பரம் கொன்றவனானால், தர்மராஜு ஓட நியாயமில்லையே! பாலாம்பாள் கொன்றிருந்தாலும், தர்மராஜு ஓட நியாயமில்லை. அவன் ஓடிப்போனதே சந்தேகத்திற்குக் காரணந்தான். அவன்மேல்தான் யாவருக்கும் ஸந்தேகம். என்னவோ எப்படிப் பார்த்தாலும் இந்தக் கேஸ் மாயமாகத்தான் இருக்கிறது.

"சீதை கொலை நடந்தபொழுது கர்ப்பிணியாய் இருந்தாளே அவள் கதியும், அவள் குழந்தை கதியும் என்ன ஆயிற்றோ? இருபது வருஷமாய், சங்கரனைப்பற்றியாவது சீதையைப்பற்றியாவது தனக்கொன்றும் தெரியாதென்று பாலாம்பாள் சொல்லுகிறாள்.

"சங்கரிக்கு டப்பி சமாசாரம் சங்கரனிடமிருந்து தானே தெரிந்திருக்கவேண்டும்? அப்படியானால் சங்கரன் மங்களபுரத்தில்தான் இருக்கவேண்டும். சீதையும் அவனோடுதான் இருக்கவேண்டும். கொலைசெய்த காலத்தில் இருந்த இவ்விருவரையும் கண்டுவிட்டால் கொலை வெளியாய்விடும்.

"மங்களபுரத்தில் இந்தக் கொலை விஷயம் தெரிந்த விருத்தர்கள் யாராவது இருக்கலாம். அவர்களையும் விசாரிக்கவேண்டும். தர்மராஜு நடத்தையைப் பற்றியும், ஜானகி அம்மாளுக்கும் தர்மராஜுவுக்குமுள்ள நேசத்தைப்பற்றியும் அந்தக்காலத்தில் ஊரார் என்ன சொல்லிக்கொண்டார்கள் என்பதையும் விசாரிக்கவேண்டும்.

"கண்டபெயர்களையெல்லாம் சந்தேகிப்பதில் பயன் என்ன? சிதம்பரத்தின்மேல் சந்தேகம். ஆனால், அதற்குத் தகுந்த சாக்ஷயத்தைக் காணவில்லை. ஆனால், ஏன் இந்த விஷயத்தில் அவர் இவ்வளவு பிரதிகூலம் செய்யவேண்டும்?—அடடா! மணி 12-க்கு மேல் ஆயிற்றே! எது, துப்பறிவது என்பது கஷ்டமாக வல்லவோ இருக்கின்றது! இந்த சக்கடத்தில் உண்மையை அறிவது எப்படி? எப்படி நேருமோ? சங்கரியைத் தான் நம்பி இருக்கிறோம்."

என்று இவ்விதம் பலவாறாகச் சிந்தித்துப் பின் படுக்கைக்குச் சென்றான் கைலாஸம்.

பதினெட்டாவது அத்தியாயம்.

ஸபாபதியும் சங்கரியும்.
Sabapathy & Sankari.

மறுநாள் காலை சுமார் பத்துமணி இருக்கலாம். மங்களபுரத்துப் பிள்ளையார்கோவில் தோட்டத்தில் ஓர்மாமரத்தின் அடியில் சபாபதியும் சங்கரியும் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

சபா:—"என் 'நாவல்' முழுமையும் படித்துப் பார்த்தாயா?"

சங்:—"பேஷ்! நன்றாய் இருக்கிறது. சொல்லவும் வேண்டுமா உமது சாமார்த்தியத்தை! இனிமேல் இந்த மாதிரி நாவல் எழுதியே பொருள் சம்பாதித்துவிடலாம்!"

சபா:—"நீ மட்டும் இந்த மாதிரி கதைகள் கட்டிக்கொடுத்தால், அவைகளை வைத்துக்கொண்டு நான் எவ்வளவு 'நாவல்' எழுதலாம்!"

சங்:—"'கட்டுமானம்' என்று நினைக்கிறீர்? விஷயம் வாஸ்தவமாய் நடந்தது. சேந்தியில் பழைய தமிழ்ப் பத்திரிகை ஒன்று கிடந்தது. அதை வாசித்தேன். விஷயம் வேடிக்கையாய் இருந்தது. உமக்குச் சொன்னேன்."

சபா:—"இந்த நாவலை உன் தகப்பனார் வாசித்தாரோ?"

சங்:—"அவருக்குப் பொய்க்கதை யெல்லாம் பிடிக்காது. ராமாயணம், பாரதம், வேதாந்தநூல்கள் இவைகளைத்தான் படித்துக்கொண்டே இருப்பார்."

சபா:—"பத்திரிகையில் கண்ட சமாசாரத்தை நீ எனக்குச் சொன்னதைப்பற்றி உன் தகப்பனார் ஒரு வேளை கோபிப்பாரோ?"

சங்:—"பைத்தியமா!' 85-ம் வருஷத்திலே எதோ நடந்ததைச் சொன்னால் அவர் ஏன் கோபித்துக் கொள்ளுகிறார்? அந்தப் பத்திரிகை இருப்பதுகூட அவருக்குத் தெரிந்திராது."

சபா:—"ஆனால், விஷயம் வாஸ்தவமாய் நடந்தது தானே?'

சங்:—"'மங்களபுரம் கொலைக்கேஸ்' என்று அந்தக்காலத்தில் பிரமாதமாய் இருந்திருக்கிறது. ஆனால் நாம் இதன் உண்மையை ஏன் வெளியிட வேண்டும், மௌனமாயிருத்தலே நலம்."

சபா:-"ஐயோ! நான் ஒருவனிடத்தில் சொல்லிவைத்தேனே!"

சங்:—"உண்மையில் நடந்ததென்று சொல்லிவிட்டீர்?"

சபா:—"ஆமாம்!"

சங் —"யார் கேட்டது உம்மை?"

சபா:—"மூன்று பெயர்கள்: ஒரு கிழவரும், இரண்டு யௌவன புருஷர்களும். அவ்விருவரில், ஒருவர்பெயர் கைலாஸம், மற்றவர் பெயர்—மறந்து போயிற்று."

சங்:—"ஆ! அதனால் என்ன பிரமாதம்? சும்மா வேடிக்கையாய்க் கேட்டிருப்பார்கள். நாவல் நன்றாய் இருக்கிறதல்லவா?"

சபா:—"நன்றாய்த்தான் இருக்கிறது. ஆனால் வாஸ்தவத்தில் துரைசாமிதான் கொன்றிருப்பான் என்று உனக்குத் தோன்றுகிறதோ?"

சங்:—"எனக்குத் தோன்றவில்லை. தர்மராஜுவாகத்தான் இருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம்."

சபா:—"தர்மராஜுவா? அவன் யார்?"

சங்:—"ஓ! மறந்து போனேனே. உம்முடைய புஸ்தகத்தில் சுந்தரம் என்பதுதான் தர்மராஜு. அவன் கொலைசெய்ததாகத்தான் எழுதச்சொன்னேன் உம்மை. நீர் துரைசாமி செய்ததாக எழுதிவிட்டீர்—"

சபா:—"அப்படி எழுதி இருந்தால், அந்தக் கதையில் ஸ்வாரஸ்யமே இருந்திராது. தர்மராஜுமேல் குற்றம் இருப்பது சாதாரணமாய் எல்லோருக்கும் நன்றாய்த் தோன்றக் கூடியது. சந்தேகத்துக்கே இடமில்லாத ஒருவன் மேல் குற்றம் கற்பித்தால் அல்லவோ, கதை ஸ்வாரஸ்யப்படும். கழுவுக்கேற்ற கோமுட்டி துரைசாமி அகப்பட்டான். சரி. சுந்தரம்—அதாவது தர்மராஜுதான் கொலைசெய்தவன் என்று நீ நினைக்கிறாயா?"

சங்:—"எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. இல்லாவிட்டால் என் அவன் ஓடிப்போகவேண்டும்?"

சபா:—"அவனை அதுமுதல் கண்டு பிடிக்கவே இல்லையோ?"

சங்:—"இல்லை! கொலை நடந்து இருபது வருஷம் ஆயிற்று. இன்னும் இந்த விஷயம் மாயமாகத்தான் இருக்கிறது."

சபா:—"நீ, அந்தப் பழைய பத்திரிகையைக் கொடு பார்க்கிறேன். நான் ஒருதரம் வாசித்து விட்டுக் கொடுக்கிறேன்."

சங்:—"அம்மா! அது முடியாது. அன்றைக்கு நான் வாசித்துக் கொண்டிருக்கையில், பலராமன் என்னைக் கோபித்துக்கொண்டு, அதனைப் பிடுங்கி, எங்கேயோ ஒளித்துவைத்து விட்டான். அந்தச் சமயத்தில் அவனுக்கு வந்த கோபம்—"

இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக்கொண்டு இருக்கையில், தோட்டத்தருகே செல்லும் ரஸ்தாவில் ஒருவண்டி வந்து நின்றது. ராமஸ்வாமியும், கைலாஸமும் கீழே இறங்கினார்கள்.

சபா:—"அந்த இரண்டு பேர்களும்தான் என்னை வந்து விசாரித்தது."

சங்:—"அப்படியா! அதனால் என்ன? என்ன இந்தப் பயம் பயப்படுகிறீர்?"

சபா:—"சங்கரி! என்னவோ, இன்றொன்றும் நல்லதற்குக் காலம் இல்லை. (சிரித்துக்கொண்டு) ஒருவேளை 'போலீஸ்'—."

சங்:—"வெட்கம்! வெட்கம்! இதற்கு என்ன பயம்?"

சபாபதி யாதொன்றும் பதில்சொல்ல மாட்டாமல் விடை பெற்று மறைந்தான். இதை எல்லாம் கவனித்த சங்கரி, இயற்கையாய்த் தைரியம் உள்ளவளாயினும், "—'85ம் வருஷ சமாசாரத்தைப் பத்திரிகையில் படித்ததை அப்படியே வைத்துவிடாமல் இவ்வளவு தூரம் ஏன் இழுத்துவிட்டுக்கொண்டேன்! ஒருவேளை இவர் சொல்லுகிறபடி இது ஏதாவது விபரீதமாய் முடியுமோ?" என்று சற்று மனம் கலங்கினாள்.

என்ன செய்யலாம்? விதியின் பயனே பயன். இருபது வருஷத்திற்கு முன் நடந்த கொலை, மறுபடி பிரமாதமாவதற்குச் சங்கரி, தான் அறியாமலே, காரணமாய் ஏற்பட்டாள். உலகவாழ்வெல்லாம் சதுரங்கப்பலகைக்கு ஒப்பானது. உலகத்துள்ள மானிடர்களோ சதுரங்கக் காய்களாவர். இக்காய்களை நடத்தும் ஓர் சக்தியானது மனிதனுக்கு மேற்பட்டதாய் இருக்கின்றது. அதனை, விதி எனக் கூறுவார் சிலர்; மதி எனக் கூறுவார் சிலர்; தெய்வம் எனக் கழறுவர் ஆஸ்திகர்கள்; நாஸ்திகர்கள் பிரகிருதி எனக் கூறுகிற்பர்.

இதற்குள் கைலாசம் ராமஸ்வாமியை அங்கேயே நிறுத்தி விட்டுச் சங்கரியண்டை வந்து சேர்ந்தான்.

கைலா:—"என்ன, அம்மா! சௌக்கியம் தானா?"

சங்:—"சௌக்கியம்தான் வாருங்கள். ஏது? இங்கே வருவதே கிடையாதே!"

கைலா:—"வராமலென்ன? நேற்றுத்தான் கோர்ட் அடைப்பு;—என்ன ஊரில் ஏதாவது விசேஷம் உண்டா?"

சங்:—(தனக்குள்) "சபாபதி சொல்லியது சரியாய் விட்டதே!" (வெளிப்படையாய்) "இந்தப் பட்டிக்காட்டில் என்ன விசேஷம் இருக்கப்போகிறது? தாங்கள் பட்டணத்திலிருந்து வந்திருக்கிறீர்கள்; ஏதாவது இருந்தாற் சொல்லுங்கள், கேட்கிறேன்."

கைலா:—"ஏது, சபாபதி வந்திருக்கிறுன் போலிருக்கிறதே. அவன் நாவல்தான் ஊரெல்லாம்—."

சங்:—"ஆமாம்! அந்த விஷயத்தில் அவர் அதிர்ஷ்டசாலியே."

கைலா:—(புன்சிரிப்புடன்) "எல்லாம் உன் உதவிதானே?"

சங்:—"என் உதவி என்ன!"

கைலா:—"அவன் அப்படித்தானே சொல்லுகிறுன்."

சங்:—(ஏற்றுப் பயர்து) "தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே!"

கைலா:—"ச்ஸ்! **விதியின் டூபன்** என்ற நாவலின் கதையே நீதானே சொன்னதாம் அவனுக்கு."

சங்:—"அப்படியே இருக்கட்டுமே! அதனுலே என்ன!"

கைலா:—"அதனுல் ஒன்றுமில்லை. அவனுக்கு வந்த பெருமை எல்லாம் உனக்குத் தெரிந்ததுதானே! சரி! உனக்கு அந்தக் கதை எப்படித் தெரிந்தது?

சங்:—(தனக்குள்) "எனக்கென்ன? அவரே வெளியிட்டுவிட்டார். நானும் சொல்லிவிடுகிறேன்." (வெளிப்படையாய்) "சேந்தியில்—'85-ம் வருஷப் பத்திரிகை ஒன்று இருந்தது. அதில் இருந்து இந்தக்கதை வாசித்தேன். அது வேடிக்கையாய் இருந்தது. அவருக்கு, என்னவோ, சொன்னேன்;—அவரும், என்னவோ, எழுதி வைத்தார்."

கைலா:—"அந்தப் பத்திரிகை சுதேசமித்திரன் தானே?"

சங்:—"அது தங்களுக்கு எப்படித் தெரியும்?"

கைலா:—"நானும் அதைப் பார்த்தேன்—; மங்களபுரம் கொலைக் கேஸைத் தெரிந்துகொண்டேன்."

சங்:—"தங்களுக்கும் அந்தக் கேஸ் தெரியுமோ?"

கைலா:—"உனக்குத் தெரிந்த அளவு எனக்குத் தெரியும்."

சங்:—"நான் யாருக்கு சமாசாரம் சொன்னேனோ அவருக்கு உண்மை ஒன்றும் தெரியாது. பெயர்களை எல்லாம் மாற்றி ஒரு கட்டுக்கதை மாதிரி சொன்னேன். இப்பொழுது தங்களுக்கு எந்த மட்டும் தெரியுமோ?"

கைலா:—"எனக்கு ஸபாபதியைக் காட்டிலும் அதிகமாகவே தெரியும்"

சங்கரிக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. 'கைலாஸத்திற்கு எவ்வளவுவரை தெரிந்திருக்குமோ' என்று நினைத்து, 'சரி! இதேதோ அநர்த்தமாகத்தான் வந்துவிட்டது'என்று தியங்கினாள். தான் முன்பு பத்திரிகையை வாசித்துக்கொண்டு இருக்கையில், பலராமன் நிர்த்தாக்ஷண்யமாய்க் கடிந்து, பத்திரிகையையும் பிடுங்கிக்கொண்டு சென்றது அவளுக்கு ஞாபகம் வந்தது.

கைலா:—"சங்கரி! ரஸ்தாவில் நிற்கிறது யார் தெரியுமா?"

சங்:—"யார்? தெரியவில்லையே!"

கைலா:—"அவர் ராமஸ்வாமி!"

சங்:—"ராமஸ்வாமி என்றால்? நான் அவருக்கு ஏதாவது கெடுதி செய்தேனா?"

கைலா:—"அல்ல. ஸபாபதிக்கு இந்தக் கேஸைச் சொன்னது மூலமாய் என் நண்பனுக்கு நீ மிகுந்த உதவிதான் செய்து இருக்கிறாய்."

சங்:—"சரி. அவர் யார்? சொல்லுங்கள்."

கைலா:—"அவரா? அவர் மங்களபுரத்தில் கொலை செய்யப்பட்டு இறந்த சோழவின் குமாரர், ராமஸ்வாமி!"

பத்தோன்பதாவது அத்தியாயம்.

சங்கரியின் வாக்கு மூலம்.
Sankari's Statement.

கைலாஸமும் சங்கரியும் சற்றுநேரம் மௌனமாயிருந்தார்கள். தான் வெளியிட்ட ஸமாசாரம், சங்கரி மனதில் எவ்வாறு வேலை செய்கிறதென்று கைலாஸம் அவள் முகத்தைக் கவனித்துப் பார்த்தான். "வேடிக்கையாய்ப் பத்திரிகையில் படித்த ஸமாசாரம், வாஸ்தவமாய் நேருக்கு நேர் நேர்ந்துவிட்டது. பத்திரிகையில் வெளியான ஸமாசாரம் உண்மையாய் ஸம்பவிப்பதே அரிதென்றும், ஆனால் வேடிக்கையாயிருக்கிறதே என்றும், நினைத்து, நான் ஒருவருக்குச் சொல்ல, அதைக்கொண்டு அவர் ஒரு நாவல் எழுத, அந்த நாவலை வாசித்த இரண்டு யௌவன புருடர்களும், தங்கள் வேலைகளை எல்லாம் விட்டொழித்து, இதற்காகவே கட்டுசாதம் கட்டிக் கொண்டு என்னை விசாரிக்க வந்திருக்கிறார்களே. இது எல்லாம் விதியின் கொடுமையல்லவா?" என்று சிந்திக்கலானள்.

கைலா:—"சங்கரி! நீ யோசிப்பதெல்லாம் அறிந்துகொண்டேன். இவ்விதமாக நம் வாழ்நாட்களில் ஸம்பவிப்பது அரிது தான். என் நண்பன், தன் தகப்பனர் கதியை அறிந்தவனே அல்லன். ஒருநாள் நீ சொல்லிய பத்திரிகையைப் பார்க்க நேர்ந்தது. அதிற்கண்ட ஸமாசாரத்தை எனக்குச் சொல்லிக்கொண்டிருந்தான் ஆனல் அதற்குமுன்னமே எனக்கு அந்தச் சமாசாரம் தெரிந்திருந்தது. ஆனதால்—"

சங்:—"தாங்களும் அந்தப் பத்திரிகையை வாசித்தீர்களோ?"

கைலா:—"இல்லை. நான் 'விதியின் பயன்' வாசித்தேன். அதில், "மங்களபுரம் கொலை" ஒரு கதையாகச் சொல்லப்பட்டிருந்தது. நாங்களிருவரும் ஆச்சரியப்பட்டோம். தமிழ்ச்சங்கம் சென்று ஸம்பந்தம் யார் என்று விசாரித்து ஸபாபதியைத் தெரிந்து கொண்டோம். அவன் உன் பெயரைக் குறிப்பிட்டான். இப்பொழுது உன்னிடம் வந்திருக்கிறோம்."

சங்:—"என்னல் ஆகக்கூடியது என்ன?"

கைலா:—" உன்னால் ஆகக்கூடியதா?—இந்த விஷயத்தில் உனக்குத் தெரிந்த ஸமாசார மெல்லாம் எங்களுக்கு விபரமாய்ச் சொல்லவேண்டும்"

சங்:—" எதற்காக?"

கைலா:—"என் நண்பன் ராமஸ்வாமி தன் தகப்பனரைக் கொன்றவனைக் கண்டுபிடிக்க விரும்புகிறான்.—"

சங்:—"இருபது வருஷத்திற்குப்பிறகு அது எப்படி முடியப் போகிறது?"

கைலா:—'அப்படித்தான் நானும் முதலில் நினைத்தேன் ஆனால் இந்த இரண்டு மூன்று நாட்களில் தெரிந்த ஸமாசாரத்தைப் பார்த்தால், உன் உதவி மாத்திரமிருக்கும் விஷயத்தில், எப்படி யாவது கண்டுபிடித்து விடலாமென்று தோன்றுகிறது."

சங்:—"நான் என்ன உதவி செய்யக்கூடும்?"

கைலா:—"ஆகா! உன்னால் ஆகவேண்டிய சிலவிஷயங்கள் இருக்கின்றன. நாங்கள் வந்த காரணம் அதுதானே?"

பயத்தால் சங்கரியின் முகம் வெளுத்தது. "இதென்ன ஆச் சரியம்! மறந்துபோன பழைய அபவாதம் என் அசட்டுத்தனத் தால் அல்லவோ வெளியாய் விட்டது. அகர்த்தத்தை நானே வலு வில் இழுத்துவிட்டுக் கொண்டேனே" என்று மனங்கலங்கினாள். "கைலாசம்! நான் என்ன உதவி செய்யப்போகிறேன். நானும் அந்தக்காலத்துப் பத்திரிகையைப் படித்துப் பார்த்துத்தானே இந்த விஷயங்களைத் தெரிந்துகொண்டேன்" என்று வருத்தத் துடன்தெரிவித்தாள்.

கைலா:-"வாஸ்தவந்தான்.-ஆனால் பத்திரிகைகளில் இல்லாத ஸமாசாரமும் 'நாவ'லில் சொல்லப்பட்டிருக்கிறதே.ஆதலால்——"

சங்:-"அப்படியிருந்தால் அது எழுதினவரது கட்டுமானமாக இருக்கலாம். அது விவரம் அவரைக் கேட்டால் தெரியும்"

கைலா:-"அந்த நாவலில் போடி டப்பி ஸமாசாரம் வருகிறதே, அது கட்டுப்பாடா?"

சங்:—(தியங்கி) "இல்லை! டப்பி ஸமாசாரம் எனக்குப் பலராமன் சொன்னான்"

கைலா:—" பலராமனு? பலராமன் என்பவன் யார்?"

சங்:—"அவன் எங்கள் பரிசாரகன். வீட்டில் அவன் இட்டது சட்டம். நான் அந்தப் பத்திரிகைகளைப் படித்துக்கொண்டிருந்த பொழுது திடீரென்று பிடுங்கிக்கொண்டு போனான். என்ன கோபம் தெரியுமா—அவனுக்கு—அப்பொழுது—என்பேரில்—நான் அந்தப் பத்திரிகையைப் படித்ததற்கு?—"

கைலா:—"அப்படியானால் டப்பி ஸமாசாரம் அவன் சொல்லக் காரணமென்ன?"

சங்:—"அது எப்படித் தெரிந்ததென்றால், யார் கொலை செய்திருக்கலாமென்று அவனைக்கேட்டேன். அவன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. மறுபடியும் தர்மராஜுவாகத்தான் இருக்கவேண்டு மென்றேன். அதற்கு அவன் 'யாரா? பொடி டப்பி யாரைச் சேர்ந்ததோ அவனாகத்தா னிருக்கவேண்டும்' என்றான்."

கைலா:—"ஆனால், டப்பி யாரைச் சேர்ந்தது என்று சொன்னான்?"

சங்:—"அது தனக்குத் தெரியாதென்று விட்டான். ஸபாபதி டப்பியைத் துப்பாக வைத்துக்கொண்டு துரைசாமிமேல் குற்றங் கற்பிக்கிறான்"

கைலா:—"அதாவது—சிதம்பரத்தின்மேல்!"

சங்:—(திடுக்கிட்டு) "அஃதெப்படித் தெரியும்?"

கைலா:—"நான் பத்திரிகையையும் வாசித்தேன். நாவலையும் வாசித்தேன். அதனால் தெரிந்தது. சரி! சிதம்பரத்தை உனக்குத் தெரியுமா?"

சங்:—"தெரியும். எப்பொழுதாவது ஏகதேசத்தில் இங்கே வருவதுண்டு. என் தகப்பனாரும் அவரும் சிநேகர்கள்."

கைலா:—"துரைசாமி—அதாவது சிதம்பரம்—கொலை செய்த தாக நாவலில் சொல்லப்பட்டிருக்கிறதே!-உன் அபிப்பிராயமென்ன?"

சங்:—"அது ஸபாபதி செய்தவேலை. கதையை மொட்டை யாய் நிறுத்தலாகாதே. யார்பேரிலாவது குற்றம் கற்பிக்கவேண்டுமே. துரைசாமி அகப்பட்டான். சுந்தரத்தின்மேல் குற்றம் கற்பித்து இருந்தால் கொஞ்சம் உண்மையாகவே தோன்றும்—"

கைலா:—(யோசித்துவிட்டு) "சுந்தரந்தானே தர்மராஜு? இனிமேல் உண்மையான பெயர்களையே சொல்லுவோம்: ஒன்றுக் கொன்று எனக்கு மாறிப்போகிறது"

சங்:—"இதுவரை சொன்னது போதும். இனி ஒன்றும் சொல்லவேண்டாமே, 'எதற்காக அவரிடம் சொன்னேன்' என்று எனக்கு வேதனையா யிருக்கிறது. இந்தப்படியே இந்தச் சங்கதியை விட்டுத் தொலையுங்கள்."

கைலா:—"இவ்வளவு பிரயாசைப்பட்டுவிட்டு இனிமேல் விட மனம்வருமா?"

சங்:—"அப்படியானால் என்னால் ஒன்றும் சொல்லவும் முடியாது. எனக்குத் தெரியவும் தெரியாது. நான் ஒரு காரியம் செய்யப்போகிறேன்."

கைலா:—(ஆவலுடன்) "என்ன காரியம் அது?"

சங்:—"இதை என் தகப்பனாரிடத்திலும் பலராமனிடத்திலும் சொல்லி, இந்த அற்பவிஷயத்தில் நீங்கள் இவ்வளவு சிரமம்எடுத்துக் கொள்வதின் இரகஸ்யம் என்னவென்று தெரிந்துகொள்ளப் போகிறேன்."

கைலா:—"அப்படித்தானா உத்தேசம்? சரி. இருக்கட்டும். இந்தச் சிதம்பரம் இந்த விஷயத்தில்—"

சங்:—"அவருக்கு என்ன இதில் சம்பந்தம்?"

கைலா:—"ஏதோ சம்பந்தம் இருப்பதாகத்தான் தோன்றுகிறது. அவர் உன்னைப் பார்க்க வருவார் பார்."

சங்:—"என்னையா? எதற்காக என்னைப் பார்க்க?"

கைலா:—"நீ ஒன்றும் வெளியிடாமலிருக்கும்படி உன்னைக் கேட்டுக்கொள்ளலாமென்றுதான்."

சங்:—"என்ன! சபாபதியின் புஸ்தகத்தைப் படித்ததால் ஒருவேளை தங்களுக்குச் சிதம்பரத்தின்மேல்--ஏதாவது--சந்தேகமோ?"

கைலா:—"ஆம்."

சங்:—"சிதம்பரம் அந்தக் கொலை செய்திருக்கலா மென்று நினைக்கிறீர்களா?"

கைலா:—"நான் நினைப்பது இருக்கட்டும். உன் அபிப்பிராய மென்ன?"

சங்:—"தர்மராஜுதான் கொலைசெய்தவன் என்று எனக்குத் தோன்றுகிறது. அன்றிரவு ஜானகியம்மாளும் தர்மராஜுவும் ஏகாந்தமாயிருப்பதைக்கண்டு, மனம் சகியாமல் சோமு ஏதாவது சொல்லியிருக்கலாம். கலகம் நடந்திருக்கலாம். அதில் தர்மராஜு கோபா

வேசத்தால் சோமுவைக் கொன்று விட்டுத் தானும் தப்பி ஓடிப் போயிருக்கலாம். இதுதான் என் அபிப்பிராயம்.''

கைலா:—''அப்படியானல் இந்தக் கொலையில் ஜானகியும் உடந்தையாயிருக்கிறுள் என்பது உன் அபிப்பிராயமோ? ''

சங்:—''நான் அப்படிச் சொல்லவுமில்லை. சொல்லவும் முடியாது. சரி! போதும். என்னை விட்டு விடுங்கள். ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொல்லிவிட்டேன். இதைப்பற்றி நான் சொல்லியேயிருக்கவே கூடாது. போய்வருகிறேன்.''

கைலா:—''அவசரப்படாதே. கொஞ்சம் பொறு. இன்னும் ஒரு விஷயம். இந்த சமாசாரத்தைப் பற்றி உன் தகப்பனரிடம் இது முதல் இன்னும் 24 மணிநேரம்வரை நீ சொல்லக்கூடாது! ''

சங்:—''ஏன் கூடாது? ''

கைலா:—''சிதம்பரம் தானகவே தெரிவித்துக்கொள்வார். உன்னையும் கேட்கப் போகிறுர். அதைவேண்டுமானலும் நீ பார்.''

சங்:—''என்ன கஷ்டகாலம்!''

கைலா:—''கஷ்டகால மென்ன? நல்லகாலந்தான்! நல்லது தானே நீ செய்திருப்பது? சரி. நான் கேட்டுக்கொண்டபடி நாளை பகல் 11-மணிவரை இதை வெளியிடாமலிருப்பாயா?''

சங்:—''அஃதொன்றும் என்னல் வாக்களிக்க முடியாது. நான் போய்வருகிறேன்.''

கைலா:—சங்கரி! இது எவ்வளவு முக்கியமான ஸமாசாரமென்று நீ அறியவில்லை. சிதம்பரம் தாமே சொல்லிக்கொள்வார். ஆகையால் நீ ஒன்றும் சொல்லவேண்டாம். நாங்கள் எடுத்தக் காரியமும் கைகூடவேண்டியிருக்கிறது.''

சங்கரிக்கோ இன்னது சொல்வதென்று தெரியவில்லை. கைலாஸத்தோடு அவ்வளவு முன்பழக்கமில்லை. ''இவன் வார்த்தையைக் கேட்டுச் சும்மாயிருந்தால் என்ன நேரிடுமோ? ஆனல் சிதம்பரத்தின் குணம், அவ்வளவு கபடமற்றதென்றும் சொல்ல இடமில்லை. இந்த விஷயத்தில் அவரேன் இங்கு வந்து என் தகப்பனருக்குத் தெரிவிக்க வேண்டும்? என்னையும் தடுக்கவேண்டும்? எல்லாம் சந்தேகத்துக் கிடமாகத்தானிருக்கிறது. ஆனலும் ஒரு நாள் சாவகாசம்தானே கைலாஸம் கேட்டுக்கொள்வது'' என்று யோசித்து, ''சரி! நாளைப் பகல் 11 மணிவரை சொல்லவில்லை'' என்றுள்.

———

இருபதாவது அத்தியாயம்.

புதிய சந்தேகம்.
New Suspicion.

ஸ்திரீகளின் மனதில் ஏதாவது ஒரு விஷயம் பதிந்துவிட்டால் அதை மாற்றுவது அதிகக் கஷ்டமானது. கைலாஸம் போதனையால் சங்கரிக்கு சிதம்பரத்தின்மேல் சந்தேகம் ஜனித்து அது விருத்தியடைய வாரம்பித்தது. அவருடைய நடத்தையைக் கவனிக்கும்படி கைலாஸமும் எச்சரித்திருக்கிறன். இதுவரை சிதம்பரத்தின்மேல் சங்கரிக்குக் கொஞ்சமேனும் சந்தேகமேயில்லை. அப்படியிருந்த சங்கரியின் மனத்தில்கூட சந்தேகந் தோன்றச் செய்தது, சிதம்பரத்தின் மூடத்தனமே. இவ்விதமாகச் சங்கரியின் மனத்தைக் கலைத்த விஷயத்தில் தானெரு பெரிய ஜயம்பெற்றதாய்க் கைலாஸம் சந்தோஷப்பட்டான்.

"டப்பி ஸமாசாரம் சொன்னது பரிசாரகக் கிழவன், பலராமன் என்கிறள். ஆகவே டப்பிக்குச் சொந்தக்காரன் இன்னுனென பலராமனுக்குத் தெரிந்திருக்கவேண்டும். பலராமன் அதைச் சொல்லிவிட்டால் இந்தக் கொலையை வெளிப்படுத்திவிடலாம். டப்பி சமாசாரம் சோழுவின் வேலைக்காரன் சங்கரனுக்குமாத்திரந்தான் தெரியும் என்று பாலாம்பாள் சொல்லுகிறள். ஆகையால் அந்தச் சங்கரனே இந்தப் பலராமனுக இருக்கவேண்டும். அப்படியானல் இவன் ஏன் தன் பெயரைமாற்றிக்கொண்டு வசிக்கவேண்டும்? அதற்கும் ஒரு காரணம் இராமற்போகாது" என்று இவ்வாறு சிந்தித்துக்கொண்டே சங்கரியைப் பிரிந்த கைலாஸம் ராமஸ்வாமியண்டை வந்து சேர்ந்தான். ராமஸ்வாமியோ, சாலையில், ஓர் ஆலமரத்தடியில் போடப்பட்டிருந்த ஒரு சுமைதாங்கிக் கல்லில் உட்கார்ந்து, ஆவலுடன், கைலாசம் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

கைலா:—"ராமஸ்வாமி! இதென்னடா வீண் வேலை? இந்தச் சனியனை விட்டுத்தொலைப்போமே"

ராம:—"கொலை செய்தவனைக் கண்டுபிடிக்க ஒரு வழியும் இதுவரை தென்படாதது என்ன ஆச்சரியம் பார்!"

கைலா:—வழியுமில்லாமலும் போகவில்லை; இப்பொழுது தான் ஒரு சமாசாரம் தெரியவந்தது."

ராம:—(ஆவலுடன்) "என்ன சமாசாரம்?"

கைலா:—" தர்மராஜு மேல்தான் அவளுக்குச் சந்தேகம். ஆனால் நான் செய்த உபதேசத்தில் சிதம்பரத்தின் மேலும் சந்தேகந்தான்."

ராம:—"சிதம்பரத்தின்மேல் உனக்குச் சந்தேகம் இருக்கிற தென்று தெரிவித்தாயோ!"

கைலா:-"வெளிப்படையாய் அப்படி சொல்லவில்லை. ஸூக்ஷ்மமாய் போட்டுவைத்தேன் ஒருவார்த்தை."

ராம:—(வருத்தத்துடன்) "கைலாசம்! சிதம்பரம் விஷயத்தில் நீ செய்யும் வேலை அவ்வளவு தர்மமில்லை. அவர்மேல் குற்றமில்லை யென்று என் தாயாரும் உறுதியாய்ச் சொல்லுகிறாள்."

கைலா:—(வெறுப்புடன்) "அப்படியானால் எனக்கு வேறு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. ஆனால் ஒரு சங்கதி. நாம் எடுத்த காரியத்தை அவர் ஏன் தடுக்க முயலவேண்டும்!"

ராம:—"எனக்கும் அந்த விஷயத்தில் கொஞ்சம் சந்தேகம் தான். ஆனால் அதற்குக்காரணம் இப்பொழுதுதான் தெரிகிறது. அதாவது ஒரு வேளை என் தாயாரே இந்தக்கொலைக்குக் காரணமா யிருக்கலாம். சீதையும் என் தகப்பனாரும் ஏகாந்தமாயிருந்ததைத் தான் கண்டதாக என் தாயார் சொல்லுகிறாள். கோபம் பாபம் சண்டாளம். ஒருவேளை கோபத்தினால் என்னவிபரீதம் நடந்ததோ? சிதம்பரம் இதையறிந்து அவள் குற்றத்தை மறைக்கப் பார்க்க முயலலாம்."

கைலா:—"ஆனால் விசாரணை நடந்திருக்கிறதே—"

ராம:—"விசாரணையைத் தள்ளுடா! விசாரணையில் என் தகப்பனார் அன்றிரவு வீட்டுக்கு வரவே இல்லை என்று சங்கரன் பொய்சாக்ஷி சொல்லி இருக்கிறான். என் தகப்பனார் வந்தார் என்பது நமக்கு இப்போது தெரிகிறது. சீதையும் என் தகப்பனாரும் ஏகாந்தமாயிருப்பதைப் பார்த்த என் தாயார் இந்த வேலை செய் திருக்கலாம்"

கைலா:—"அப்படியானல் உன் தாயார் ஏன் இப்படி உனக்குக் கடிதம் எழுதுகிருள்? ; உன் தாயார்மேல் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. மேலும், 'டப்பி' சங்கதி, உன் தாயார், சிதம்பரம், சங்கரன் ஆகிய 3 பேர்களுக்கு மாத்திரம் தெரியும். உன் தாயார் 'உண்டு' என்கிருள். சிதம்பரம் 'இல்லை' என்கிருர். சங்கரன் எவர்பக்கம் என்ன சொல்லியிருக்கிருனே அதுதான் ஸ்திரம்."

ராம:—"சங்கரனை எங்கே காண்பது.? இதுவரை உயிரோடு தானிருக்கிருனே? அல்லது எங்கே போனனே?"

கைலா:—"இங்கேதான் சமீபத்தில் இருக்கிருன். பலராமன் டப்பி சங்கதி தனக்குச் சொன்னதாகச் சங்கரி சொல்லுகிருள். ஆகையால் பலராமன்தான் சங்கரன்."

ராம:—(ஆச்சரியத்துடன்) "அப்படியானல் அவன், ஏன், தன் பெயரை மாற்றிவைத்துக் கொள்ளவேண்டும்?"

கைலா:—"அதன் ரகஸ்யம் நமக்கு எப்படித்தெரியும்? ஒரு வேளை பலராமன்தான் கொலை செய்தானே என்னவோ? "

ராம:—"அது எப்படி இருக்கக்கூடும்? சங்கரனுக்கு என் தகப்பனரிடத்தில் எவ்வளவு அந்தரங்க விசுவாசம்! அப்படியிருக்க அவனே என் தகப்பனரைக் கொலைசெய்யும்படி என்ன காரணம் ஏற்பட்டிருக்கக்கூடும்? "

கைலா:—"காரணமில்லாமலா சொல்லுகிறேன்! உன் தாயார் வாக்குமூலப்படி சீதையும் உன் தகப்பனரும் ஏகாந்தமாய் இருப்பதைக்கண்டு உன் தாயார் சச்சரவு செய்திருக்கலாம். சங்கரன் அதைக்கேட்டு கோபாவேசத்தோடு ஓடிவந்திருக்கலாம். உன் தாயார் என்ன நேரிடுமோவென்று பயந்து மூர்ச்சை அடைந்திருக்கலாம். சங்கரன் தன் சகோதரிக் கேற்பட்ட அவமானத்தால் மனம் வருந்தி உன் பிதாவைக் கொன்று ஆற்றில் இழுத்து எறிந்து இருக்கலாம். மானத்துக்கும், சங்கரன் கோபத்துக்கும் பயந்து, சீதையும் ஓடிப்போயிருக்கலாம்—"

ராம:-"அப்படியானல் சங்கரனும் ஓடிப்போயிருக்கமாட்டானு?"

கைலா:—"யானை தன்தலைமேலேயே மண்ணைப்போட்டுக் கொள்வது போலவா? சங்கரன் நல்ல புத்திசாலி. உன் தகப்பனுக்கும் தர்மராஜுவுக்கும் ஏற்கனவே கொடிய விரோதமுண்டென்

பது ஊர்ஜிதமான விஷயம். தர்மராஜுவைப் பயமுறுத்தித் துரத்தி விட்டான். பழி ஓடினவன்மேல் விழுந்தது. அன்று இரவில் சோமு வரவேயில்லை என்று பொய்ச் சாக்ஷி சொல்லி, தானும் தப்பி, தன்னையும் தன் யஜமானியையும் தப்புவித்துக் கொண்டான். ஆனால் இவை எல்லாம் ஒரு அனுமானந்தான். இன்னும் கிடைக்கத்தக்க சாக்ஷிகளுக்குத் தக்கபடி நாம் ஊகித்துக் கொள்வோம்.'

ராம:—(அதிருப்தியுடன்) "கைலாசம்! நீ சொல்லுவது சரியாகத் தோன்றவில்லை. என் தகப்பனார் அன்றிரவு வீட்டுக்கு வரவேஇல்லை என்று சொன்ன சங்கரன், தர்மராஜுவை எதற்காக ஓடச்சொல்லவேண்டும்?"

கைலா:—"எல்லாம் ஆத்ம சம்ரக்ஷணார்த்தம்தான். முதலில் தர்மராஜுமேல் பழியைச் சுமத்திவிட்டால் அதோடு கேஸ் அடங்கிப் போமென்று நினைத்திருக்கலாம். தன் எஜமானியையே பிடித்தபொழுது அவளைத்தப்புவிக்க அவ்விதமாய்ப் பொய்ச்சாக்ஷிசொல்ல நேர்ந்திருக்கலாம். உன் தகப்பனார் அன்றிரவு வந்ததைச் சொல்லக் கூடியதானால் நான்கே பேர்கள் தான் சொல்லலாம்—சங்கரன், சீதை, உன் தாயார், தர்மராஜு. உன் தாயார், தான் தப்புவதற்காகச் சொல்லவில்லை. சங்கரன் பொய் சொல்லி விட்டான். சீதையும் தர்மராஜுவும் ஓடிப்போய் விட்டார்கள்."

ராம:—"ஆமாம்! தர்மராஜு ஏன் சங்கரன்மேல் பழியைப் போடாம லிருந்துவிட்டான்!"

கைலா:—"சங்கரன் கொலைசெய்தானென்பதே அவனுக்குத் தோன்றி யிராது. கொஞ்சம் கவனி: அன்றிரவு, உத்ஸவத்திலிருந்து உன் தாயாரும் தர்மராஜுவும் திரும்பி வந்திருக்கலாம். உள்ளே உன் தாயார் மட்டும் பிரவேசித்ததும், சிறிது நேரத்துக்கெல்லாம் சங்கரன் ஓடிவந்து, எஜமானனைக் கொன்றுவிட்டால் அதில் நீயும் உடந்தைதான் போலிருக்கிறது என்று சொல்லிப் பயமுறுத்தித் தர்மராஜுவைத் துரத்தி யிருக்கலாம். தர்மராஜு தன்னையும் ஜானகியம்மாளையும்பற்றின ஊர் அபவாதத்தால் தன் மேலும் சந்தேகிக்க இடமுண்டாமென்று பயந்து ஓடி இருக்கலாம்.'

ராம—"அப்படியானால், சங்கரன்தான் கொலை செய்திருக்கலாமென்று நீ நினைக்கிறாய்?"

கைலா:—"அவ்வளவு உறுதியாய்ச் சொல்ல முடியாது. இந்த நிலைமையில் என்ன சொல்லமுடியும்? ஆனால் இதெல்லாம் அனுமானந்தான். அப்படியில்லாவிட்டால், சங்கரன், 'பலராமன்' என்று தன் பெயரை மாற்றி வைத்துக்கொள்வானேன்? சங்கரி அந்தப் பத்திரிகைகளைப் பார்த்தால் இவனுக்கென்ன? அவைகளைப் பிடுங்கிக் கொண்டுபோய் இவன் ஒளித்து வைப்பானேன்? அவைகளைப் படித்ததற்காகச் சங்கரியைக் கண்டிப்பானேன்? இவைகளுக்கெல்

லாம் காரணமில்லாமலா இருக்கும்? சிதம்பரத்தின் மேல் சந்தேகந் தான். அதைக்காட்டிலும் சந்தேகமாயிருக்கிறது உன் தகப்பனுடைய அந்தரங்க வேலைக்காரன் சங்கரன் மேல்."

ராம:—"எனக்குத் தோன்றவில்லை. சங்கரன் கொலைசெய்தவனாக இருக்கும் விஷயத்தில், டப்பி சமாசாரம் சங்கரிக்கு வெளியிட்டிருக்க மாட்டான்."

கைலா:—"என்மாட்டான்? டப்பி உண்மையாய்த் தர்மராஜனுவுக்காவது, சிதம்பரத்துக்காவது சொந்தமாயிருந்திருக்கலாம். இந்தக் குட்டி பத்திரிகைகளை வாசித்ததும், தன்மேல் சந்தேகம் அவள் மனதில் தோன்றாமலிருப்பதற்காக டப்பி சமாசாரம் சொல்லியிருக்கலாம். இந்த நிலைமையில் எனக்குச் சங்கரன் மேல் தான் பூராச்சந்தேகமும் தோன்றுகின்றது. வாஸ்தவமாகவே சங்கரனே கொலை செய்தவனாக ஏற்பட்டாலும் அது எனக்கு ஆச்சரியமாயிராது."

ராம:—"ஆனால் சிதம்பரத்தின் சமாசாரம்? அவர் மீதிருந்த சந்தேகம் தீர்ந்துவிட்டதா?"

கைலா:—(இரண்டு மூன்று தடவை தலையைத் தேய்த்துக்கொண்டு) "இப்பொழுது இப்படியே இருக்கட்டும். எனக்கு எல்லாம் ஏகக் குழப்பமாயிருக்கிறது. பலராமன் என்ற சங்கரனை விசாரித்த பிறகு எல்லாம் யோசித்துக்கொள்வோம்."

R. S. நாராயணசாமி ஐயர், B. A., B. L.

பராந்தகன்.

பதினோராவது காட்சி.

இடம்:— காமராஜ பாண்டியன் மனை.
காலம்:— இரவு 11 மணி.

பாத்திரங்கள்:—காமராஜபாண்டியனும், அவன் நண்பர்களான தங்கமுத்துதேவன், தினகரன், ஆனையப்பன், முத்துசெட்டி, நமச்சிவாயத்தம்பிரான் முதலியோர்களும்.

காம:—கெணறு வெட்ட பூதம் இல்லெ பொறப்பிட்டிடேச்சு! நான் மாயாண்டியோடே செஞ்ச ஏற்பாடு, ஆர் மூலமாகவோ தெரிஞ்சு போயிருக்கணும். இல்லாட்டி, மாயாண்டி செத்து, அவ பொளைக்க முடியுமா? இது ஆருக்கு, எப்படி, தெரிஞ்சிருக்கும்? மங்கையர்க்கரசியைக் கன்னளம் பண்ணிக்க உக்ரபாண்டியனுக்

கும் ஆசை. ஆனா அவன் என்னைப்போல அயோக்கியத்தனமா ஏதும் செய்யல்லே. ஒருவேளை அவனே என்னை அறியாமே நெணல்போலத் தொடர்ந்து, என்னைக் கவனிச்சு, மாயாண்டி உசிரை வாங்க, அந்தப் படுபாவி பயங்கரனைத் தேடிப்பிடிச்சு, இப்படியெல்லாம் செஞ்சிருப்பனோ?—மாயாண்டி செத்ததுக்காவது அந்தச் சண்டாளிபொளச்சதுக்காவது இப்போ எனக்கு வருத்தமில்லே. எனக்கில்லே இப்போ கேடு பலமாப் பிடிச்சிருக்கு. அவளை எப்படியாவது கண்ணாளம் செய்ய நான் பாடுபடுவதும், அவனை அப்படியே தூக்கியாந்து, சிறையோ கொலையோ செய்ய இரண்டு தடவை துணிஞ்சு வேலே செஞ்சும் அருமானப்பட்டுத் தம்புரான் புண்யத்தாலே தலைதப்பிப் பொளச்சதும், ஆரும் மறந்திருக்க மாட்டாங்க. பாண்டியனுக்கும் அவன் மந்திரிகளான நீதிபாலன், கருணாகரன், மதிவாணன், குணசீலன், சமயோசிதன் ஆகிய நாலு பேருக்கும் என்னைத்தவிர வேறே ஆர்மேலே சமுசயம் ஏற்பட்டிருக்கும்? உக்ரபாண்டியனோ, மந்திரிகளோ, இதுக்கெல்லாம் நான்தான் காரணமிண்டு பாண்டியன் மனசிலே படும்படி ஏதாவது செஞ்சிருந்தா, செத்தே போனேன். நான் மட்டும் இல்லே. என் கூட்டாளிகளும் கூட்டோடே கைலாசம் போய்விடுவாங்க. ஆர் எக்கேடுகெட்டாலும் கெடட்டும். படுபாவிக என்னைச் சித்திரவதை செஞ்சிடுவாங்களே!

[பலர் கதவைத்தட்டும் சப்தம் கேட்கிறது. காமராஜன் பரபரப்புடன் கதவைத் திறக்கிறான். அவனுடைய நண்பர் சிலர் உள்ளே நுழைந்ததும், அவன் கதவைத் தாளிட்டு அவர்களைத் தன் அறைக்குள் அழைத்துச் செல்லுகிறான்.]

தங்க:—மாராசாவுக்கு என்ன உடம்பு?

காம:—ஒண்ணுமில்லே, தேவரே! எப்போதும்போலத்தானே இருக்கேன்.

தீன:—காமராசாவுக்கு உடம்பு ஒண்ணுமில்லே. செக்கொலக்கை போலத்தான் இருக்காரு. இருந்தாலும் இவரைப்போல பயங்குளி நான் பாத்ததே இல்லே. எல்லாரும் சேர்ந்து கதவைத் தட்டினதும், போலீஸ் பட்டாளந்தானோ இண்டு பயந்துட்டாரு. அவ்வளவுதான்.

காம:—வெளயாட்டுப் பேச்சுவேண்டாம். மேக்கொண்டு என்ன நடந்திச்சு? ஆருக்காவது தெரிஞ்சாச் சொல்லுங்க.

ஆனை:—மாயாண்டியைச் சேர்ந்த ஆள்களை மந்திரிக வலே போட்டுத் தேடிக்கிட்டு இருக்காங்க.

தீன:—பாண்டியன், தன் மகளைக் கொல்ல மாயாண்டியை அமுத்தினவங்க இன்னாரிண்டு கண்டுபுடிச்சுச் சொல்றவங்களுக்குப்

பத்தாயிரம் போன் தருவதாக வெளம்பரப்படுத்தி யிருக்கான்.

தங்க:—ஏளைகளும், பாண்டியனுக்கு வேண்டியவங்களும், நல்லவங்களும், அந்தப் பொண்ணுக்கு இரக்கப்பட்டவங்களும், அவனையும் மாயாண்டி ஆள்களையும் நம்மையும் கண்டுபிடிக்க ரொம்ப ரொம்ப வேலை செய்யராங்க.

ஆண:—மாயாண்டியெக் குத்திக் கொலைசெய்து, அந்தக் குட்டிக்கு உசிர்குடுத்த 'பயங்கரன்' இங்கிரவனையும் எதுக்கோ ரகசியமாத் தேடராங்க. அந்தப் பயலும் பாண்டிய ராசாவுக்கு விரோதியாம். அவன் அந்தக் குட்டியை முத்தமிட்டு ஏதோ செஞ்சிட்டானும். ஆராரு ஆப்பிட்டுக்கிடப் போராங்களோ, ஆராருக்குக் கேடு பிடிக்கப்போகுதோ, எப்படி எப்படி எல்லாம் பிடிக்கப் போகுதோ, ஒண்ணுந் தெரியல்லே.

காம:—ஐயோ! எனக்குப் பயமாயிருக்கு. எல்லாரும் கூடி யோசிச்சு நாம் தப்பிக்கிற வளியைச் சொல்லுங்க.

தின:—எனக்கு ரெண்டே வளி தெரியும். ஒண்ணு நாம்பளெல்லாம் ரோக்கியமா இனிமேலாவது இருக்கிறது. அதுவோ இந்த ஜன்மத்திலெ இல்லெ. ஏன்? எந்த ஜன்மத்திலேயும் இல்லெ. எப்போ அது இல்லேயோ, 'எதுவந்தாலும் வரட்டும்; ஒரு கை பாத்திடுவோம்' இங்கிர தயிரியமிருக்கணும். சும்மாச் சங்கடப்பட்டுச் செத்துச் செத்துப் பொளக்கிறது எனக்கு பிடிக்கவே இல்லே.

ஆண:—அம்ப காமராசா எப்போதுமா யிப்படி யிருந்தாரு? கையிலெ காசிருந்த வரைக்கும் ஒத்தரெ லெச்சியம் பண்ணினரா? இப்போ அவுகளுக்கு ஏதோ போதாத காலம். இந்த நிமிசம் எங்கிருந்தாச்சும் பணமட்டும் வந்திடுச்சோ, அவரைக் கட்டிப் பிடிக்க ஆராலாகும்?

தங்க:—ஆமா. ஆரும் பணமில்லாட்டிப் பொணந்தானே?

காம:—அதுக்குச் சந்தேகமா? என்கையிலே இப்போ காசுமில்லெ கடங்கொடுப்பார் ஆருமில்லே. ஒங்க ஆருகிட்டே யிருந்தாலும் இருக்காடுதக் குடுங்க. பளபாக்கியும் சேத்துத்தாரேன். வேலெயெத் தொடங்கி மேலே நடக்கவேண்டிய காரியத்தை முடிப்போம். பட்டங் கெடச்ச மறுநிமிசமே வட்டியோடே ஒங்க பணம் வீடுவந்து சேரும்.

தின:—இங்கே ஆருகிட்டெ இருந்தாவது இப்போ அரைக்காசு பேர முடியுமா? அம்ப பணமெல்லாம் கள்ளுக்கடையிலும், கூத்திகுச்சுகளிலும், சூதாடிச் சாவடிகளிலும், கொலகாரங்க வீடுகளிலுமில்லே குவிஞ்சு கெடக்கு. நான்படும் கஷ்டம் இவ்வளவு அவ்வளவில்லெ. உளவறிஞ்சு நம்மைப் பிடிக்கவந்த ஆளுகளுக்குக் கடனும்வாங்கி எம்புட்டு அளுதிருக்கேன் தெரியுமா? ராப்பகல்கூட பாராமெ கடன் கொடுத்தவங்க கதவை ஒடச்சு,

தூக்கத்தெக் கலச்சு, யிருக்கிரதெப் பிச்சுப்பிடிங்கிக்கிட்டுத் தினம் போராங்க.

காம:—தேவரே! அப்போ என்கெதி அதோகதி தானு? எனக்காக ஏதேதோ ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருந்தீரே, என்னைக் காப்பாத்த என்ன ஏற்பாடு செஞ்சுருக்கீர்?

தங்க:—மாராசாவை விட்டுடுவேனு? ஆனு அம்ப முயற்சியினுலெ ஒரு பிரயோசனமுமில்லே. பாண்டிய ராசாவும் அவன் மந்திரிகளும் நம்மெ விடப்போறதே இல்லே. ஒண்ணு அவங்க சாகணம், ஒண்ணு நாம சாகணம்.

காம:—நாம சாவாதாயிருந்தா இந்த யோஜனையெல்லாம் எதுக்கு?

தங்க:—அது தெறிஞ்ச துதான். நான் சும்மா இராமெ, பாண்டிய ராசாவுக்கு ஆகாத பணக்காரங்களாப் பாத்துப்பிடிச்சு, அம்ப சொத்துலே கொஞ்சங்கொஞ்சங்கொடுத்து, ஆசைகாட்டி, அவங்க செநேகம் பிடிச்சிருக்கேன். அவங்க சமயத்துக்கு அம்பளோடெ சேந்து எதுவுஞ் செய்வாங்க. உசிருங் கொடுப்பாங்க. அப்படி யாக்கொந்த ஆளுகளைப் புடிச்சிருக்கேன்.

காம:—எனக்குக் கொஞ்சம் தயிரியம் உண்டாகப் பாண்டியனுக்கு ஆகாத கொல்லுக்கொலேக்கஞ்சாத ஒரு பணக்காரன் பேரைச் சொல்லும் கேட்போம்.

தங்க:—அம்புளுக்குள்ளேயே யிருக்கட்டும். அம்ப உதவிக்கு அம்ப நமச்சிவாயத்தம்பிரான்சாமி ஒண்ணே போதாதா? அதுக்கும் பாண்டிய ராசாவுக்கும் சென்ம விரோதம் இல்லெ.!

காம:—என்ன, என்ன!—ஆரு, ஆரு?—எப்படி, எப்படி?—நல்லாச் சொல்லும் கேப்பம்.

தங்க:—அம்ப பணமிருக்கில்லெ, அது செஞ்சிருக்கிற வேலேயே வேலே. சாமியாருக்குப் பாதகாணிக்கெயா இங்கே மாராசா குடுத்ததாக இருவதுதரம் கொடுத்திருக்கேன். மாராசா பேரிலெ ரொம்ப விசுவாசம் அவருக்கு. அவுகளே இப்போ இங்கே வருவாங்க. அதுக்கெல்லாம் ஏற்பாடு பண்ணியிருக்கேன். வெவரம் அப்பரஞ் சொல்லரேன். வெகுநாளா ஊரிலெ யில்லாத நம்ப முத்துசெட்டியும் வந்துட்டான். ரெண்டு பேருக்கும் சாமார்த்தியமாச் சொல்லி வெச்சிருக்கேன். தம்பிரான் சாமிக்குச் சொன்னது முத்துவுக்குத் தெரியாது. முத்துவிடஞ்சொன்னது, தம்பிரான் சாமிக்குத் தெரியாது.

[கதவுதட்டும் சத்தம் கேட்கிறது. தங்க முத்து கதவுதிறக்க, தம்பிரான் முக்காடுடன் நுழைகிறுன். எல்லாரும் நமஸ்கரிக்கிறுர்கள். தம்பிரான் ஆசனத்தமருகிறுன்.]

காம:—சாமிவா என்ன பாக்கியஞ் செஞ்சேனோ!

தம்பி:—இப்போ நமக்குப் பேச ஷாவகாஷமில்லெ. தேவர் மூலம் எல்லா ஷமாஷாரமும் இதுக்குத் தெரியும். காமராஷாவுக்கு நாமிருக்கிறவரை பயமே வேண்டாம். பாண்டியனையும் மந்திரிகளையும் தொலெச்சபொறகு எதும் பேசுவோம்.

காம:—ஒரு சின்ன விண்ணப்பம்; சாமிக்குப் பாண்டியன் பேரிலே என் அம்புட்டுக் கோபம் ?

தம்பி:—அதெல்லாம் சவிஷ்தாரமாய்ச் சொல்ல நேரமில்லெ. பாண்டியனும் அவன் மந்திரிகளும் நாம் ரகஷ்யமாய்க் கொலஷ்திரீகளைச் சின்னக்கார்வார்மூலம் கொண்டுவந்து, கெடுத்தும் கொலெஷெய்தும் வருகிற சமாஷாரமும், இதைக் கண்டுபிடிக்கப் பிரயாஷப்படுகிறவகளெ வெட்டிக் குளியைத் தோண்டிப் புதெக்க ஆளுக அமத்திஉள்ளசேதியும், விண்ணியாக்ஷ்யத்துக்கும், விபஷாரிகளுக்கும், ஷோபா மெத்தைகளுக்கும், பிராந்தி ஷாப்புகளுக்கும் மடத்துப் பணம் செலவழியும் ஷங்கதியும்; எப்படியோ ராஷாவுக்கு எட்டியிருக்கு. அதுனலெ அவனும் அவன் மந்திரிகளும் நம்மைக் கண்டபடி திட்டி, நம்மைத் தொலெக்கவும், மடத்துச் சொத்தைப் பிடுங்கவும், இப்போ ஏற்பாடு செஞ்சுகிண்டுருக்காங்க. அவங்க நெனச்சதை முடிச்சும் போடுவாங்க. ராஷா தொலெயணும்; அதுவரை நமக்குக் கஷ்டம். ஆன மந்திரிக இருக்கிறவரைக்கும் அது முடியாது. அதிகவேண்டாம். அந்தநாலு பேரையும் அரைநாழிகை வெளியேத்தின, பாண்டியன் கரையிலே தூக்கிப்போட்ட மீன் போல் துடிச்சுச் சாவான். தேவர் தயவுமட்டுமிருந்தால் இந்த நாலுபேரும் அரைநொடியிலெ தொலெஞ்சே போய்விடுவாங்க.

காம:—சாமிக்குக் கவலெயே வேண்டாம். தேவர்மட்டும் ஒப்புக் கொண்டா, அந்தக் காரியம் முடிஞ்சிடுச்சு. ஆமா, தேவரே என்ன சொல்றீர் ?

தங்க:—நாக்குட்டிக்கு ஒருதரம் கொஞ்சம் சோடி காமிச்சாப் போதாது ? வஞ்சகமில்லாமெ ஒளெச்சு உசுரைக்குடுப்பேன, சும்மா இருப்பேன?

காம:—சாமிக்குப் பின்னெ என்ன கவலெ? அம்ப காட்டிலே பெஞ்சிச்சு மளெ. தொலெஞ்சான் பாண்டியன். சிக்கின சிறுக்கி. கிடைச்சிச்சு ராச்சியம்.

ஆனை:—காமராசாவுக்குக் கடன் கொடுத்திருக்கிற எங்களுக்கெல்லாம் கெடைச்சிச்சுப் பணம்.

தம்பி:—இந்தப் பரதேஷிப் பயமட்டும் எக்கேடுகெட்டுபோகட்டும். அப்படித்தானே ?

காம:—சாமி ! சாமி! அப்படி உத்திரவரக்கூடாது. மறக்கமுடியுமா சாமியெ? அந்தக்குட்டி ஆருக்கு? ராச்சியமே உங்களது இல்லெ ?

[கதவுதட்டும் சத்தம் கேட்கிறது. ஆனையப்பன் போய்க் கதவைத் திறந்து முத்துச்செட்டியை அழைத்து வர அவன்சாமியாரைவணங்கிநிற்கிறான்.]

தம்பி:—என்ன முத்து! எங்கே வந்தே?

முத்து:—சாமி இங்கே வரப்போர சமுசாரம் தேவர்மூலம் அறிஞ்சு சாமியைக்கண்டு கும்பிட்டுப்போக வந்தேன்.

தம்பி:—நல்லது. நடராஷா பிரஷாதம் இந்தா. முன்னே நீ போன காரியம் என்ன ஆச்சு? ஏன் அப்புறம் நம்ம ஷண்ணிதானம் நீ வல்லே? உங்கப்பன் தனபாலன் செத்தானு? சொத்து வந்திடுச்சா ஒனக்கு?

முத்து:—என்ன சொல்றது! சாமிவரந்தந்தும் பூசாரி வரந்தரல்லியே. இங்கே உத்தரவானபடியே நல்லநாள் பாத்துத்தான் பறப்பட்டேன். இந்தத் தேவரைப் பிடிச்சு மாயாண்டிமூலமா ஐயாவை நல்லாக் கவனிச்சுத் தொலைச்சுப்புட ஏற்பாடுசெஞ்சேன். ஐயாவும் எக்கச்சக்கமா மாயாண்டியின் ஆள்கையிலே சிக்கிக்கவும் செஞ்சாரு. காரியம் முடியப்போர சமயத்திலே ஒரு பரதேசிப் பய கெடுத்தேபோட்டான். சாகவேண்டியவர், மயிரெள தப்பிச்சுப் பொளைச்சு வந்துவிட்டாரு. இல்லாட்டி அப்பவே இங்கே உத்திரவான காணிக்கை வந்திருக்கும்.

தம்பி:—உன் காரியம் ஷித்திக்காமே போனதுக்குக் காரணமுண்டு. நாம் ஆஷீர்வாதம் பண்ணினதும் இருபதினுயிர ரூபாய் ஷமர்ப்பிக்கஷம்மதித்த உனக்கு, அப்புறம் 'எம்பிட்டுப் பெருந்தொகை கொடுக்கிறது! கொறைச்சுக் குடுத்தாப் போதும்', இண்டு தோணுச்சில்லே? நெசத்தைச்சொல்லு. ஒன் எண்ணம மாறிச்சு. நீ போன காரியமும் மாறிச்சு. என்ன? இல்லியா?

முத்து:—ஆமாங்க! ஆமாங்க! புத்திக்குறைவுதான் அது.

தங்க:—சாமிகிட்ட எதுவும் ஒளிக்க முடியாது முத்து! விளு சாமி காலிலே.

[முத்து காலில் விழுந்து முன் சொன்ன இருபதினுயிரத்துடன் ஆயிர ரூபாய் அபராதம் சேர்த்துத் தருவதாகச்சொல்லிக் காரியம் சீக்கிரம் முடிய ஆசிர்வதிக்க வேண்டுகிறான். தம்பிரான் ஜபம்பண்ணித் திருநீறு அபிமந்திரித்துக் கொடுத்து ஆசிர்வதிக்கிறான்]

தம்பி:—முத்து! மோஷ எண்ணத்தைவிட்டுத் தேஷிகவிஷ—வாஷத்துடனிரு. ஒனக்காக செய்யவேண்டிய காரியம் ஒண்ணு இருக்கு. அதுக்குத் பதினுயிர ரூபாய் செலவாகும். அதைத் தேவர் மூலம் அனுப்பு. பத்து நாளில் உன் காரியம் முடிந்துவிடும். சமுசியப்பட்டா காரியம் பலிக்காது. ஆமா.

முத்து:—உத்திரவு. புத்தி.

தம்பி:—நாம் நடராஜா பூஜைக்குப் போரோம். ரொம்பவும் தாமஷிச்சிட்டோம் [எல்லோரும் நமஸ்கரித்துத் தம்பிரானுக்கு விடை கொடுத்து அனுப்புகிறார்கள்]

தங்க:—முத்து! என்ன நீ கையாலாகாத பயலாய் இருக்காய்? உங்க அப்பனை எத்தனை நாள் இன்னும் உசிரோடே வச்சிருக்க உன் எண்ணம்? தூ! வெக்கமில்லெ?

முத்து:—தேவரே! என்ன செய்யாது? ராவைக்கி ராவே கல்லைத் தூக்கிப் போடவும் தீர்மானிச்சுத்தான் கிட்டப்போறேன். என்னமோ, என்னை அறியாதே மனசு குபீர் இங்கிறது. தம்பிரான்சாமி பத்துநாள் கெடுவெச்சிருக்கே பாப்போம். அதுக்குள்ளே முடியாட்டி, வெசம் வச்சாவது கொண்டு போட்டேரேன்.

தங்க:—அப்படி செஞ்சாத்தான் நீ ஆம்பளே. நீ மட்டும் மனசு வை. காரியம் முடியரதா இல்லையா பாரு. அதிருக்கட்டும். இப்ப மந்திரிகளையும் ராசாவையும் தொலேச்சாலொழிய நாம் தொலஞ்சுபோவோம். ஒன்னைத்தான் ரொம்ப ரொம்ப மந்திரிக தேடிக்கிட்டிருக்காங்க. அவுங்களைத் தொலேக்க ஆள் புடிச்சிருக்கேன். அவங்களுக்குத் தம்பிரான்சாமியும் ஐயாயிரம் பொன் தரப்போகுது. நீ எப்படியாவது உங்க ஐயா இல்லாத சமயத்திலே நான் அனுப்புகிற ஆளுகளோட போய்ப் பொட்டியை உடைச்சாவது இப்போதைக்கு மூவாயிரம் பொன்கொண்டா.

முத்து:—மூவாயிரம் பொன் தானே? நாளேயே இங்கு வந்திடும். எப்படியும் தம்பிரான்சாமக்கும் பணம் தரணுமில்லே?

தங்க:—சரி. பணத்துக்குப்பயமில்லெ. இப்போ வேறெஒரு சங்கடம் இருக்கு. மாயாண்டி மூலமா இதுவரை அம்ப காரியங்க நடந்திருக்கு. அவனோ செத்துத் தொலேஞ்சான். அவனைமட்டும்தான் நமக்குத் தெரியும். அவனுடைய ஆளுகளையாவது அவுங்க இருக்கும் இடத்தையாவது நாமறியோமே. அவங்க முந்தி இருந்த இடத்திலெயும் இருக்கமாட்டாங்களே. இருந்தாலும் எப்பாடுபட்டாவது அவங்களைத் தேடிப்பிடிச்சு. மந்திரிகளை முந்தித் தொலேச்சுப் பொறகு ராசாவுடைய உசிரை எடுக்கணும்.

காம:—அதுதான் சரி! இதுதான் நல்ல யோசனை. செத்தாலும் சரி. பொளச்சாலும் சரி. மாயாண்டியின் ஆள்களைத் தேட இப்பவே புறப்படுவோம். இன்னிக்கு எட்டாநாள் எல்லாரும் இங்குவருவோம். [யாவரும் போகிறார்கள்]

பதினோராவது காட்சி முற்றிற்று.

பராந்தகன் முதற்பாகம் முற்றிற்று.

திருக்குடந்தை ஆயக்கண்ணனார்.